**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 67. ஸ்ரீமான் பானு தாஸ் மஹராஜ்**

விஜயநகரத்திற்கு உட்பட்ட பைடனிபுரத்தில் வாழ்ந்தவர் பானுதாஸ் மஹராஜ்.பாண்டுரங்கன் அன்பர்களில் இவரும் அதிகம் மக்களால் அறியப்படுகிறார், மதிக்கப் படுகிறார்.

இவரது தந்தை சூரிய உபாசனை செய்தவர்.ஆனால் சிறு வயதில் பானு தாஸ் மிகவும் சோம்பல் கொண்டவராகவும் படிப்பு ஏறாதவராகவும் இருந்தார்.

தந்தையின் மிக்க கண்டிப்புக்கு பயந்து இவர் ஊரை விட்டு ஓடினார். தன் ஊருக்கு அருகில் இருந்த சூரிய தேவனின் கோயில் அர்ச்சகர் ஒருவர் மூலம் மந்த்ரோபதேசமும் ஞானமும் கைகூடப் பெற்றார்.

முன் ஜென்மத்தின் பலனாய் பண்டரீநாதனின் திவ்ய நாமங்களையும் புகழையும் அபங்கம் மூலம் பாடும் ஆன்மீகப் பணியை மேற்கொண்டார்.இதனால் பெற்றோரும் மக்களும் மிகவும் மதித்தனர்.

உரிய காலத்தில் இவர் துணி வ்யாபாரம் செய்தார். வ்யாபாரம் மூலமும் ஆன்மீகக் கருத்துக்களையே இவர் பரப்பி திருத்தொண்டு செய்தார்.

ஹரிதாஸ் மஹராஜ் என்பவருடைய ஆன்மீக உரையில் தன்னையும் தான் கொண்டுவந்த பொருட்களையும் பற்றிக் கவலை இல்லாமல் லயித்துக் கிடந்து ஊர் திரும்ப எண்ணிய போது, பாண்டுரங்கன் ஒரு வீரன் வடிவில் இவரது குதிரை வண்டி, பொருட்கள் ஆகியவற்றை பத்திரமாக இவருக்கே திருப்பி அளிக்கிறான்."**கேவலம் அழியும் பொருளை ஈசன் கவனிக்கும் போது அழியா ஆத்மாவை நான் விரும்பவில்லையே!**" என்ற ஞானம் கைகூட அவர் பரம யோகியாக மாறினார்.

பண்டரீபுரத்தில் இவர் பலகாலம் வாழ்ந்து தன் பஜனைகள் மூலம் மிக்க ஆன்மீக நெறியை பக்தர்கள் மத்தியில் பரப்பினார்.

ஹம்பி மஹாராஜா தேவி உபாசகன்.அவன் அதிகம் ஹிம்சையைக் கைக்கொண்டான்.பானு தாஸ் அவனை நல்வழிப்படுத்தி சாத்வீகமான தேவி உபாசனையையும் போதித்தார்.அவனுக்கு மந்த்ர தீக்ஷை அளித்து அதன் மூலம் பண்டரீபுரத்தில் வைகுண்ட தரிசனம் பெறச் செய்தார்.அதைக் கண்டு மகிழ்ந்த அவன் பக்தியின் போதையில் பண்டரீபுர மூல மூர்த்தியை ஹம்பிக்குக் கொண்டு சென்று விடுகிறான்.அவனுக்கு நல்லுரை கூறி வேறு மூர்த்தியை ப்ரதிஷ்டை செய்து பழைய படி பண்டரீதேவனை இன்று காணும் இடத்தில் ப்ரதிஷ்டை செய்தார் பானுதாஸ் மஹராஜ்.

நீண்ட ஆயுள் பெற்ற இவர் அரசனாலும் மக்களாலும் மதிக்கப் பட்ட ஆன்மீக அன்பர்.

ஹரி ஓம்!